## சுருக்கம்

நகராட்சி நிர்வாக இயக்குநரகம் – வேலைகள் – ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் விலை விகிதங்கள் குறித்து பொறியியல் கையேட்டிற்கு திருத்தம் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி3) துறை**

**அரசாணை (நிலை) எண். 46** நாள் : 25.03.2009

**படிக்கப்பட்டவை:**

1. அரசாணை(நிலை)எண்.35 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 10.03.2000 (பொறியியற் கையேடு ஒப்புதல்)
2. அரசாணை (நிலை) எண்.538 பொதுப்பணித்துறை (ஜி2), நாள் 01.10.2004
3. அரசாணை(நிலை) எண்.197 பொதுப்பணித்துறை (ஜி2), நாள் 09.06.2008
4. நகராட்சி நிர்வாக இயக்குநர் கடிதம் ந.க.எண்.15587/வ.அ1/நநிஅ/2008 நாள் 06.12.2008

******

**ஆணை :**

முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் பயன்படுத்தப்படும் பொறியியற் கையேட்டிற்கு ஒப்புதல் வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேற்படி கையேட்டில் பக்கம் 41–ல் Annexure-I பத்தி 7–ல் ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் விலை விகிதங்கள் கீழ் கண்டுள்ள அட்டவணையில் உள்ளவாறு ஒப்புதல் வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.

| வ. எண். | பணிகளின் மதிப்பு விவரம் | விலை விகிதம் |
|---|---|---|
| 1. | ரூ.2.00 லட்சத்திற்கு மேல் மற்றும் ரூ.5.00 லட்சம் வரை உள்ள வேலைகள் | ரூ.500/ + விற்பனை வரி மற்றும் மிகுவரி |
| 2. | ரூ.5.00 லட்சத்திற்கு மேல் மற்றும் ரூ.10.00 லட்சம் வரை உள்ள வேலைகள் | ரூ.1000/– + விற்பனை வரி மற்றும் மிகுவரி |
| 3. | ரூ.10.00 லட்சத்திற்கு மேல் மற்றும் ரூ.25 லட்சம் உள்ள வேலைகள் | ரூ2000/– + விற்பனை வரி மற்றும் மிகுவரி |
| 4. | ரூ.25.00 லட்சத்திற்கு மேல் மற்றும் ரூ.50.00 லட்சம் உள்ள வேலைகள் | ரூ.3000/– + விற்பனை வரி மற்றும் மிகுவரி |
| 5 | ரூ.50.00 லட்சம் மேல் மதிப்புடைய வேலைகள் | ரூ.5000/– + விற்பனை வரி மற்றும் மிகுவரி |

2. இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், பொதுப்பணித்துறையின் ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் (விலை விகிதங்கள்) திருத்தி அமைக்கப்பட்டு கீழ்க்கண்ட அட்டவணையில் கண்டுள்ளவாறு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

| வ. எண். | பணிகளின் மதிப்பு விவரம் | திருத்தியமைக்கப்பட்ட விலை விகிதம் |
|---|---|---|
| 1. | ரூ.10,000/– வரையிலான மதிப்புடைய வேலைகள் | ரூ.300/– + விற்பனை வரி |
| 2. | ரூ.10,000/–க்கு மேல் மற்றும் ரூ.2 லட்சம் வரை உள்ள வேலைகள் | ரூ.600/– + விற்பனை வரி |
| 3. | ரூ.2.00 லட்சத்திற்கு மேல் மற்றும் ரூ.5.00 லட்சம் வரை உள்ள வேலைகள் | ரூ.1500/– + விற்பனை வரி |
| 4. | ரூ.5.00 லட்சத்திற்கு மேல் மற்றும் ரூ.10.00 லட்சம் வரை உள்ள வேலைகள் | ரூ.3000/– + விற்பனை வரி |
| 5. | ரூ.10.00 லட்சத்திற்கு மேல் மற்றும் ரூ.25 லட்சம் வரை உள்ள வேலைகள் | ரூ.6000/– + விற்பனை வரி |
| 6. | ரூ.25 லட்சத்திற்கு மேல் மற்றும் ரூ.50 லட்சம் வரை உள்ள வேலைகள் | ரூ.9000/– + விற்பனை வரி |
| 7. | ரூ.50.00 லட்சத்திற்கு மேல் மதிப்புடைய வேலைகள் | ரூ.15,000/– + விற்பனை வரி |

3. தற்போது கணினி வழி ஒப்பந்தப்புள்ளி முறை அறிமுகப்படுத்தப்பட்டதாலும், தற்போது ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை வலை தளங்களில் இருந்து பதிவிறக்கம் (Down Load) செய்து கொள்ள முடியும் என்பதாலும், ரூ.10.00 லட்சமும் அதற்கும் அதிகமான மதிப்புள்ள பணிகளைப் பொறுத்த வரையில் ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் விலை தொடர்பாக மாற்றம் ஏதும் தேவையில்லை எனவும் ரூ10.00 லட்சத்திற்கு குறைந்த செலவிலான பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களின் விலை அரசாணை (நிலை) எண்.538 நாள் 01.10.2004ல் நிர்ணயிக்கப்பட்ட விலையில் 50% சதவிதத்தைக் குறைத்து ரூ.1500/–க்குள் + மதிப்புக் கூட்டுவரி வரையறை (Limited) செய்து நிர்ணயிக்கப்படலாம் என்றும் அரசாணை(நிலை) எண்.538, பொதுப்பணித்துறை நாள் 01.10.2004க்கு கீழ்காணும் திருத்தங்கள் செய்து மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் கீழ்க்கண்டவாறு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது.

| வ. எண். | விவரம் | தற்போது திருத்தப்பட்டுள்ள புதிய விலை விகிதம் |
|---|---|---|
| 1. | ரூ.10,000/– வரையிலான மதிப்புடைய வேலைகள் | ரூ.150/– + மதிப்பு கூட்டுவரி |
| 2. | ரூ.10,000/–க்கு மேல் மற்றும் ரூ.2 லட்சம் வரை உள்ள வேலைகள் | ரூ.300/– + மதிப்பு கூட்டுவரி |
| 3. | ரூ.2 லட்சத்திற்கு மேல் மற்றும் ரூ.5 லட்சம் வரை உள்ள வேலைகள் | ரூ.750/– + மதிப்பு கூட்டுவரி |
| 4. | ரூ.5 லட்சத்திற்கு மேல் மற்றும் ரூ.10 லட்சம் வரை உள்ள வேலைகள் | ரூ.1500/– + மதிப்பு கூட்டுவரி |

4. நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் நகராட்சி நிர்வாக இயக்குநர், பொதுப்பணித்துறை அரசாணையில் குறிப்பிட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தையே நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கும் பொருந்துமாறு ஏற்கனவே நகராட்சிகள் பொறியாளர் கையேடு ஒப்புதல் வழங்கியுள்ளதைக் கீழ்க்கண்டுள்ளவாறு திருத்தம் செய்து ஆணை வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

| வ. எண். | பணிகளின் மதிப்பு விவரம் | நகராட்சி பொறியாளர் கையேடு அரசாணை எண்.35 நாள் 10.03.2000ல் நிர்ணயிக்கப்பட்ட விலை விகிதம் | தற்போது திருத்தி அமைக்கப்பட்ட உள்ள பொதுப் பணித் துறை புதிய விலை விவரம் |
|---|---|---|---|
| 1. | ரூ.10,000/– வரையிலான மதிப்புடைய வேலைகள் | நிர்ணயிக்கப்படவில்லை | ரூ.150/– + மதிப்பு கூட்டுவரி |
| 2. | ரூ.10,000/–க்கு மேல் மற்றும் ரூ.2 லட்சம் வரை உள்ள வேலைகள் | நிர்ணயிக்கப்படவில்லை | ரூ.300/– + மதிப்பு கூட்டுவரி |
| 3. | ரூ.2 லட்சத்திற்கு மேல் மற்றும் ரூ.5 லட்சம் வரையுள்ள வேலைகள் | ரூ.500/– + விற்பனை வரி மற்றும் மிகுவரி | ரூ.750/– + மதிப்பு கூட்டுவரி |
| 4. | ரூ.5 லட்சத்திற்கு மேல் மற்றும் ரூ.10 லட்சம் வரையுள்ள வேலைகள் | ரூ.1000/– + விற்பனை வரி மற்றும் மிகுவரி | ரூ.1500/– + மதிப்பு கூட்டுவரி |
| 5. | ரூ.10 லட்சத்திற்கு மேல் மற்றும் ரூ.25 லட்சம் வரையுள்ள வேலைகள் | ரூ.2000/– + விற்பனை வரி மற்றும் மிகுவரி | ரூ.6000/– + மதிப்பு கூட்டுவரி |
| 6. | ரூ.25 லட்சத்திற்கு மேல் மற்றும் ரூ.50 லட்சம் வரையுள்ள வேலைகள் | ரூ.3000/– + விற்பனை வரி மற்றும் மிகுவரி | ரூ.9000/– + மதிப்பு கூட்டுவரி |
| 7. | ரூ.50 லட்சத்திற்கு மேல் மதிப்புடைய வேலைகள் | ரூ.5000/– + விற்பனை வரி மற்றும் மிகுவரி | ரூ.15000/– + மதிப்பு கூட்டுவரி |

மேலும் அவ்வப்போது பொதுப்பணித்துறை மற்றும் நிதித்துறை இது குறித்து வெளியிடும் கட்டண விகிதத்தையே இத்துறையும் பின்பற்றலாம் எனவும் அரசு உத்தரவிடக் கேட்டுக் கொண்டுள்ளார்.

5. மேற்கூறிய நகராட்சி நிர்வாக இயக்குநரின் செயற்குறிப்பினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, அதனை ஏற்று முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணை(நிலை) எண்.35, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 10.03.2000–ற்கு கீழ்க்காணும் திருத்தங்கள் செய்து ஆணையிடுகிறது.

## திருத்தம்

நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் பயன்படுத்த ஒப்புதல் வழங்கப்பட்ட பொறியியல் கையேடு பக்கம் 41–ல் Annexure-I பத்தி 7–ல் ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் விலை விகிதங்கள் கீழ்க்கண்டவாறு திருத்தி அமைக்கப்படுகின்றன.

| வ. எண். | பணிகளின் மதிப்பு விவரம் | நகராட்சி பொறியாளர் கையேடு அரசாணை எண்.35 நாள் 10.03.2000ல் நிர்ணயிக்கப்பட்ட விலை விகிதம் | தற்போது திருத்தப்பட்டுள்ள புதிய விலை விவரம் |
|---|---|---|---|
| 1. | ரூ.10,000/– வரையிலான மதிப்புடைய வேலைகள் | நிர்ணயிக்கப்படவில்லை | ரூ.150/– + மதிப்பு கூட்டுவரி |
| 2. | ரூ.10,000/–க்கு மேல் மற்றும் ரூ.2 லட்சம் வரை உள்ள வேலைகள் | நிர்ணயிக்கப்படவில்லை | ரூ.300/–+ மதிப்பு கூட்டுவரி |
| 3. | ரூ.2 லட்சத்திற்கு மேல் மற்றும் ரூ.5 லட்சம் வரையுள்ள வேலைகள் | ரூ.500/– + விற்பனை வரி மற்றும் மிகுவரி | ரூ.750/– + மதிப்பு கூட்டுவரி |
| 4. | ரூ.5 லட்சத்திற்கு மேல் மற்றும் ரூ.10 லட்சம் வரையுள்ள வேலைகள் | ரூ.1000/– + விற்பனை வரி மற்றும் மிகுவரி | ரூ.1500/– + மதிப்பு கூட்டுவரி |
| 5. | ரூ.10 லட்சத்திற்கு மேல் மற்றும் ரூ.25 லட்சம் வரையுள்ள வேலைகள் | ரூ.2000/– + விற்பனை வரி மற்றும் மிகுவரி | ரூ.6000/– + மதிப்பு கூட்டுவரி |
| 6. | ரூ.25 லட்சத்திற்கு மேல் மற்றும் ரூ.50 லட்சம் வரையுள்ள வேலைகள் | ரூ.3000/– + விற்பனை வரி மற்றும் மிகுவரி | ரூ.9000/– + மதிப்பு கூட்டுவரி |
| 7. | ரூ.50 லட்சத்திற்கு மேல் மதிப்புடைய வேலைகள் | ரூ.5000/– + விற்பனை வரி மற்றும் மிகுவரி | ரூ.15000/– + மதிப்பு கூட்டுவரி |

மேலும் அவ்வப்போது பொதுப்பணித்துறை மற்றும் நிதித்துறை இது குறித்து வெளியிடும் கட்டண விகிதத்தையே இத்துறையும் பின்பற்றலாம் எனவும், வலைதளங்களிலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளும் ஒப்பந்தப்புள்ளி படிவங்களுக்கு விலை நிர்ணயம் செய்ய தேவையில்லை எனவும் அரசு ஆணையிடுகிறது.

6. இவ்வரசாணை நிதித்துறை அ.சா.கு எண்.11382/09, நாள் 12.03.2009ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

// ஆளுநரின் ஆணைப்படி //

நிரஞ்சன் மார்டி,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை– 600 005.
தலைமைப் பொறியாளர் (நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணிகள்) பொதுப்பணித்துறை, சென்னை–5
தலைமைப் பொறியாளர் (பொது) பொதுப்பணித்துறை, சென்னை–5
தலைமைப் பொறியாளர்(கட்டிடம்) பொதுப்பணித்துறை, சென்னை–5
பொறியியல் ஆலோசகர், தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியம், சென்னை
பொறியியல் இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை–5
உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர், சென்னை
பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை, நிதித்துறை, சென்னை–9
போக்குவரத்துத் துறை, சென்னை –9
நகல்:
மாண்புமிகு அமைச்சர் (ஊ.வ (ம) உ.) அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
மாண்புமிகு நிதித்துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை–9
செயலரின் நேர்முக உதவியாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை–9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந2) துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு/உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

26/3/09
பிரிவு அலுவலர்.
26-3-09